# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE, TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 35 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. கிருஷ்ணன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of July 2025.

**(A1 to A5 present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு உட்கோட்டத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.08.2015 அன்று நான் மேலப்பாளையம் காவல்நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தபோது, அன்றைய தினம் பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் பொறுப்பு ஆய்வாளராக பணியில் இருந்தேன். அந்த நாளில் காலை 9 மணிக்கு பாளையங்கோட்டை வட்டம், திம்மராஜபுரம் கிராம

கிராம நிர்வாக அலுவலர் திருமதி. பரமேஸ்வரி அவர்கள் கொடுத்த புகாரினை பெற்று, பாளையங்கோட்டை காவல்நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.தர்மலிங்கம் என்பவர் புகாரின் தன்மைக்கேற்ப பாளையங்கோட்டை காவல் நிலைய குற்ற எண். 608/2015, சட்டப்பிரிவுகள் 302, 201 IPC ன் படி வழக்கு பதிவுசெய்து எனக்கு பொறுப்பு காவல் ஆய்வாளர் என்ற முறையில் தகவல் தெரிவித்தார். அதன் அடிப்படையில் கொலை குற்ற வழக்கு என்பதால் நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது, ஏற்கெனவே முதல் தகவல் அறிக்கையை பதிவுசெய்த சிறப்பு உதவி ஆய்வாளர் சொன்ன தகவலின்படி தலையில்லாத முண்டம் கொலையுண்டு கிடப்பதாக சொன்னதன் பேரில் நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது, மாநகர காவல் நுண்ணறிவு பரிவில் நமது மாவட்ட எல்லைக்குள் ஏதேனும் Man Missing அல்லது கடத்தல் வழக்குகள் ஏதேனும் பதிவுசெய்யப்பட்டுள்ளதா என கேட்டபோது, இல்லை என தகவல் சொன்னார்கள். அதன் பின் நான் திருநெல்வேலி மாவட்ட தனிப்பிரிவில் கேட்கும்போது அச்சன்புதூரில் ஒரு நபரை கடத்தியதாக தகவல் சொன்னார்கள். கடத்தப்பட்டவருடைய வயது சுமார் 45 – 50 என்றும் அவரது பெயர் ராஜகோபால்என்றும் சொன்னார்கள். அதன் அடிப்படையில் நான் அச்சன்புதூர் காவல் ஆய்வாளரை தொடர்பு கொண்டு, அச்சன்புதூர் காவல் நிலைய எல்லைக்குள் ஏதேனும் கடத்தல் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதா என கேட்டபோது, ஒரு கடத்தல் வழக்கில் புகார் வந்திருப்பதாக கூறினார். நான் அவரிடம் கடத்தப்பட்டவரின் உறவினர்களை என்னை தொடர்பு கொள்ளசெய்யுமாறு கூறினேன். நானும் அவர்களது செல் நம்பரை வாங்கி அவர்களை தொடர்பு கொண்டு சம்பவ இடத்திற்கு வரவழைத்தேன்.

அதே தினம் காலை 10 மணிக்கு நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். விசாரணை நகலை பெற்றுக்கொண்டேன். சம்பவ இடத்தில் காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை சாட்சிகள் மணிகண்டன், பண்டாரம் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ.27** ஆகும். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.28** ஆகும். அதன் பின்பு, அதே சாட்சிகளின் முன்பு சம்பவ இடத்தில் ரத்தம் பட்ட மண் கொஞ்சம், ரத்தம் படாத மண் கொஞ்சம், ரத்தக்கரையுடன் கூடிய எரிந்தும் எரியாத நிலையில் கிழிந்த வேஷ்டி

துணிகள் 4, மஞ்சள் நிற பார்டருடன் கூடிய சிறிய கிழிந்த வேஷ்டி துண்டு 1, தலையில்லா பிரேதம் எரிக்கப்பட்ட இடத்தின் அருகில் சாம்பல் இல்லாத மண் கொஞ்சம், பிரேதம் எரிக்கப்பட்ட இடத்தில் பெட்ரோல் வாடை வீசிய சாம்பல் கலந்த மண் கொஞ்சம், AIM மஞ்சள் கலர் தீப்பெட்டி 22 குச்சிகளுடன், பெட்ரோல் வாடை வீசும் 2 லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் பாட்டில் ஒன்று மூடியுடன் கூடியது, அதில் சிறிதளவு பெட்ரோல் இருந்தது. அந்த பாட்டில் பச்சை நிறமும், அதன் மூடி ஊதா நிறத்திலும் இருந்தது. இவற்றை அத்தாட்சி பிறப்பித்து அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ. 29** ஆகும். நான் கைப்பற்றிய **ரத்தம் பட்ட மண் சா.பொ.7, ரத்தம் படாத மண் சா.பொ.8, பிரேதம் எரிக்கப்பட்ட இடத்தின் அருகிலிருந்து எடுக்கப்பட்ட சாம்பல் இல்லாத மண் சா.பொ.9, பிரேதம் எரிக்கப்பட்ட இடத்தின் அருகிலிருந்து எடுக்கப்பட்ட பெட்ரோல் வாடை வீசிய சாம்பல் கலந்த மண் சா.பொ.10, AIM மஞ்சள் கலர் தீப்பெட்டி (22 குச்சிகளுடன் கூடியது) சா.பொ.11. பெட்ரோல் வாடை வீசும் 2 லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் பாட்டில் ஒன்று (மூடியுடன் கூடியது) சா.பொ.12.** அந்த அத்தாட்சியை காலை 11.30 – 12.30 மணியளவில் நான்தயார் செய்தேன். அதில் மேற்சொன்ன அதே சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

அதன் பின்னர் சம்பவ இடத்திற்கு தகவல் சொல்லி வரவழைக்கப்பட்டிருந்த அச்சன்புதூரை சேர்ந்த முருகன், லட்சுமி, தங்கம், ஜானகிராமன் (எ) குமார் ஆகியோர் மேற்படி தலையில்லா பிரேதத்தை அடையாளம் காட்டி கொலையுண்டு இறந்துபோனவர் அச்சன்புதூர், நெடுவயல், சிவகாமிபுரம் காலனியை சேர்ந்த செல்லத்துரை மகன் ராஜகோபால் (எ) சண்டியர் என உறுதியாக கூறினார்கள். அதன் அடிப்படையில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்பு சாட்சிகள் முருகன், செந்தூர்பாண்டியன், சகாயசுந்தர், இசக்கிதேவர், ஜானகிராமன் (எ) குமார் ஆகிய பஞ்சாயத்தார்கள் முன்பு தலையில்லா முண்டத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 30** ஆகும்.

அந்த சமயத்தில் சம்பவ இடத்தில் போலீஸ் புகைப்படக்காரர் திரு. சங்கரபாண்டியன் என்பவர் உடன் இருந்து தலையில்லா பிரேதத்தையும் சுற்றுப்புறங்களையும் புகைப்படம் எடுத்தார். சம்பவ இடத்தில் நடமாடும் தடய அறிவியல்

ஆய்வக உதவி இயக்குநர் திரு. ரொனால்டு ரவிச்சந்திரன், அத்தாட்சியில் தடய பொருட்களை கைப்பற்றும்போது உதவியாக இருந்தார். அதன் பின்னர், திருநெல்வேலி மாநகர குற்றப்பிரிவு மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு அதன் பயிற்சியாளர் திரு. டேனியல் ராஜாசிங் மற்றும் திரு. மகேந்திர குமார் ஆகியோர் சம்பவ இடத்திற்கு மோப்ப நாயுடன் வந்து துப்பறியும்நோக்கில் வரவழைக்கப்பட்டு, மோப்ப நாய் சம்பவ இடத்திலிருந்து பைபாஸ் ரோட்டில் 1 கி.மீ தூரம் ஓடிச்சென்று நின்றுவிட்டது. சம்பவ இடத்தின் சாட்சிகள் வி.ஏ.ஓ பரமேஸ்வரி, கிராம உதவியாளர் திரு. வேம்பன், முருகன், லட்சுமி, தங்கம், ஜானகிராமன் (எ) குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்பு தலையில்லா முண்டத்தின் மீது பிரேத விசாரணையை முடித்தேன். அதன் பின்னர், உடற்கூராய்விற்காக சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சொர்ணம் என்பவர் மூலமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன். திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி சட்டம் சார்ந்த பேராசிரியர் வசம் பிரேத பரிசோதனைக்காக மேற்படி பிரேதத்தை ஒப்படைக்க பணித்தேன்.

அதன் பின்பு, சாட்சிகள் கண்ணன், சிவா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இவர்கள் இருவரும் அன்றைய தினம் இரவு சுமார் 01.30 மணியளவில் TN-03-0002 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற கார் ஒன்று நிற்பதை பார்த்ததாகவும், மெட்ராஸ் ரிஜிஸ்ட்ரேஷன் வண்டி ஏன் இங்கு நிற்கிறது என்று அருகில் சென்று பார்த்தபோது 5 பேர் நின்றுகொண்டிருந்ததாகவும், ஏன் இங்கு நிற்கிறீர்கள் என்று கேட்டதற்கு நாங்கள் கன்னியாகுமரி போகவேண்டும் என்றும் அதற்காக பாத்ரூம் வந்ததால் ஓரமாக வந்தோம் என்று கூறியதாக தெரிவித்தார்கள். சாட்சிகள் ரொனால்டு ரவிச்சந்திரன், டேனியல் ராஜாசிங், முதல்தகவல் அறிக்கையை துரித தபாலாக கொண்டு சென்று குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராமகிருஷ்ணன், மற்றும் புகைப்படம் எடுத்த தலைமை காவலர் திரு. சங்கரபாண்டியன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். தலையில்லா முண்ட பிரேதத்தை அன்றைய தினம் உடற்கூராய்வு செய்ய இயலாது என்பதால் பிணவறையில் பாதுகாக்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன் பின்பு பிரேதம் மறுநாள் 14.08.2015ம் தேதி 10 மணிக்கு மீண்டும் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சட்டம் சார்ந்த மருத்துவ பிரிவுக்கு

எடுத்துசெல்லப்பட்டு பிரேத பரிசோதனை முடித்த பின்னர் நல்லடக்கம் செய்வதற்காக இறந்த நபரின் உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

பிரேத விசாரணை அறிக்கையை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ஆறுமுகம் மூலமாக திருநெல்வேலி கணம் குற்றவியல் நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் ஒப்படைக்க பணித்தேன். பிரேத பரிசோதனை அலுவலாக சென்ற சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சொர்ணம் நிலையத்தில் அறிக்கை செய்த பின்னர் அவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பிரேத பரிசோதனையின் போது வெட்டி எடுக்கப்பட்ட துணிகளான எரிந்த நிலையில் ஊதா கலர் ஜட்டி ஒன்று அதில் RKG என்ற அடையாளம் காணப்பட்டது. எரிந்தநிலையில் வெள்ளை நிற பனியன் ஒன்று, எரிந்த நிலையில் வெள்ளை நிற சட்டை ஒன்று ஆகியவற்றை நிலையத்தில் ஒப்படைத்தார். அதனை படிவம் – 91 மூலம் நீதிமன்றம் அனுப்பினேன். அந்த **படிவம் – 91 (2 எண்ணம்) அ.சா.ஆ.31, 32** ஆகும்.

அன்றைய தினம் பிரேத பரிசோதனையின் போது, தொடை எலும்பு, வெட்டப்பட்ட கழுத்தின் எலும்பு பகுதி, ரத்தம், எரிந்த உடல் திசு ஆகியவற்றை சேகரித்து நீதிமன்றம் மூலம் பகுப்பாய்விற்கு அனுப்ப வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்பு சாட்சிகள் சொர்ணம், திரு. ஆறுமுகம் மற்றும் தர்மலிங்கம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவுசெய்தேன். அதன்பின்பு, பாளையங்கோட்டை காவல் ஆய்வாளர் பொறுப்பேற்றப்பின்னர் அவரிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் கடந்த 12.08.2015ம் தேதி இரவில் இருந்து 2 நாட்களுக்கு பாளையங்கோட்டை காவல் நிலைய பொறுப்பில் இருந்தேன். கடந்த 13.08.2015ம்தேதி காலை 09.15 மணியளவில் குற்ற எண். 608/2015 வழக்கில் சம்பவ இடம் செல்வதற்காக பாளையங்கோட்டை காவல் நிலையத்திலிருந்து தகவல் கொடுக்கப்பட்டது. நான் எத்தனை மணிக்கு தகவல் கிடைத்து சம்பவ இடம் சென்று, சுற்றுப்புறங்களை பார்வையிட்டேன், விசாரணையை தொடங்கினேன் என்பது குறித்து பாளையங்கோட்டை காவல் நிலைய பொது நாட்குறிப்பில் துலங்கும் என்றால் சரிதான். நான் அச்சன்புதூர் காவல் ஆய்வாளர் வழக்கு சம்பந்தமாக காலை சுமார் 09.30 மணியளவில் தொடர்புகொண்டேன். கடத்தப்பட்ட நபர், அவரது அங்க அடையாளங்கள்

பற்றிய விவரங்களை என்னிடம் ஆய்வாளர் சொன்னாரா என்றால் அங்க அடையாளங்கள் பற்றி சொல்லவில்லை. நான் வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட காலை 10.00 மணிக்கு சென்றேன். பார்வை மகசர் சாட்சிகள் இருவரும் நான் விசாரணையை தொடங்கியபோது அங்கு இருந்தார்கள். சம்பவ இடத்திற்கு அருகே வீடுகள் ஏதேனும் இருந்ததா என்றால் அருகாமையில் வீடுகள் இல்லை. சம்பவ இடத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில், எந்த திசையில் வீடுகள் அமைந்திருந்தன என்ற விவரம் தற்போது எனக்கு நினைவில்லை. அங்குள்ள சாட்சிகளிடம் சம்பவம் எப்படி நடந்தது என்பது குறித்து விசாரித்தேனா என்றால் விசாரித்தேன், ஆனால் யாருக்கும் தெரியவில்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது, பிரேதத்தின் மீதும் அருகாமையிலும் கங்குகள் ஏதேனும் எரிந்துகொண்டிருந்ததா என்றால் இல்லை. ரத்தம் படிந்த மண் என்ன நிலையில் இருந்தது என்றால் ஈரம் கலந்த நிலையில் இருந்தது, முழுவதும் காய்ந்த நிலையில் இல்லை.

நான் சம்பவ இடத்திற்கு சென்ற பின்னர் மதியம் 12.15 மணியளவில் இறந்துபோனவரின் உறவினர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். எதன் அடிப்படையில் அவர்கள் அடையாளம் காட்டினார்கள் என்றால் இறந்துபோன ராஜகோபால் 2 வருடங்களுக்கு முன்னர் இருதய நோய்க்காக பைபாஸ் சர்ஜரி செய்திருந்தார் என்றும், அடிவயிற்றிலிருந்து நெஞ்சு வரை காயத்தழும்பு இருந்ததாகவும், பைபாஸ் சர்ஜரியின் காரணமாக 2 கால் பெருவிரல்களும் பருத்தும், நகம் மேல்நோக்கி இருக்கும் என்றும் மற்ற விரல்கள் சாதாரணமாக காணப்பட்டதாகவும், அதை சம்பவ இடத்தில் தலையில்லாமல் இருந்த பிரேதத்தில் இருந்தது என்றும், அவர் எப்போதும் வெள்ளை வேட்டி, சட்டை அணிவார் என்றும், அவர் சமீபத்தில் RKG ஜட்டி வாங்கிய விவரம் தெரியும் என்றும் சொன்னார்கள். இதை தவிர்த்து வேறு ஏதேனும் மச்சங்களோ, அடையாளங்களோ சொன்னார்களா என்றால் இல்லை. பைபாஸ் சர்ஜரி காரணமாக ஏற்படும் தழும்பு அந்த சிகிச்சை பெறும் அனைவருக்கும் இருக்கக்கூடியதுதான் என்றும், பொதுவாக வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை அனைவரும் அணியக்கூடியதுதான் என்றும் சொன்னால் சரிதான். எனவே தலையில்லா முண்டத்தின் நபர் யார் என்பதை குறித்து பிரத்தியேக அடையாளங்களை கொண்டு கண்டறிய உரிய முயற்சிகளை நான் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. பைபாஸ்

சர்ஜரி காரணமாக கால் பெருவிரல் நகங்கள் மேல்நோக்கி நீண்டிருக்கும் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

குற்றவாளி யார் என்பது தெரியவராத காரணத்தினால்தான் மோப்ப நாய் பிரிவில் தகவல் சொல்லி துப்பறியும் நாய் வரவழைக்கப்பட்டது என்றால் சரிதான். மோப்ப நாயால் விசாரணையில் உரிய முன்னேற்றம் இல்லை என்று சொன்னால் சரிதான். மாவட்ட தனிப்பிரிவில் அனுமதி பெற்றுத்தான் அச்சன்புதூர் காவல் ஆய்வாளரிடம் பேசினேனா என்றால் தனிப்பிரிவில் தகவல் சொன்னேன். மேற்படி விவரங்கள் அனைத்தும் பாளையங்கோட்டை பொதுநாட்குறிப்பில் துலங்கும் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றியதாக சொல்லும் எந்த ஒரு சான்றுபொருளும் அந்த இடத்தில் கைப்பற்றப்படவில்லை என்றும், அதனால்தான் அத்தாட்சியில் சாட்சி கையொப்பமிட்டதாக சொல்லப்படும் நபர்கள் யாரும் அரசு தரப்பு வழக்கை ஆதரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரேதத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட எலும்புகள், திசுக்கள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்வதற்காக நீதித்துறை நடுவர் மூலமாக எழுத்துப்பூர்வமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடத்தில் வைத்துதான் சாட்சிகளை விசாரித்தேன் என்றால் சரிதான், ஒரு சில சாட்சிகளை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தேன்.

நான் சொன்னதுபோல், சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகளை விசாரித்ததாக சொல்வதும், காவல்நிலையத்தில் சில சாட்சிகளை விசாரித்தாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் பார்த்த பிரேதம் எரிந்த நிலையில் காணப்பட்டதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சான்று பொருட்கள் எதுவும் சம்பவ இடத்தில் கைப்பற்றப்படவில்லை என்றும், மேற்படி சான்று பொருட்கள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றும் சொன்னால் சரியல்ல. கண்ணன் மற்றும் சிவா என்ற நபர்கள் சம்பவ இடத்திற்கு பக்கத்தில் அன்றைய தினம் இரவு TN-03-0002 என்ற எண்கொண்ட வெள்ளை நிற கார் ஒன்று நிற்பதை பார்த்ததாகவும், அருகே சென்று பார்த்தபோது 5 நபர்கள் அங்கே நின்றதாகவும், ஏன் இங்கு நிற்கிறீர்கள் என்று கேட்டதற்கு, அவர்கள் கன்னியாகுமரி செல்வதாகவும், பாத்ரூம் போவதற்காக ஒதுங்கி நிற்பதாகவும் சொன்னதாக சொல்வது

பொய் என்றால் சரியல்ல. நான் பிரேத விசாரணை மேற்கொண்ட போது உடன் இருந்த பஞ்சாயத்தார்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் அச்சன்புதூரை சேர்ந்தவர்கள், அவர்கள் இறந்தவரின் உடலை பார்த்து அடையாளம் காட்ட வந்தவர்கள் ஆவார்கள். நான் கு.வி.மு.ச 174 பிரிவின் படி உரிய முறையில் பிரேத விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய புலன்விசாரணை சட்டப்படியானது அல்ல என்றும், அது ஒருதலைப்பட்சமானது என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi